# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 151/2022**

**Deposition of Wit/ness for PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அன்னம்பிள்ளை** | Caste | : | |
| Father/Husband Name | : | **ஜெயமுத்து** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.03.2026**

**முதல் விசாரணை** :

நான் குள்ளநேரியில் வசித்து வருகிறேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சுமார் 3 அல்லது 4 வருடங்களுக்கு முன்பு வலையகுளத்து கம்மா அருகே நான் தோட்டத்திற்கு வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கே சாலை அருகே கூட்டமாக இருந்தது. என்னவென்று கேட்ட போது விபத்தில் யாரோ அடிப்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். மற்ற விபரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 13.02.2022ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் கேசவம்பட்டியில் உள்ள ஜெயராமன் தோட்டத்திற்கு நான் பேச்சியம்மாள், ராஜாமணி ஆகியோர் எதிரியின் TN 58 AA1535 என்ற ஆட்டோவில் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது வலையகுளம் கம்மா அருகே சென்று கொண்டிருந்த போது மேற்படி வாகனத்தை எதிரி

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி திடீரென பிரேக் போட்டதால் மேற்படி பேச்சியம்மாள் தவறி கீழே விழுந்துவிட்டார் என்றும், உடனே ஆட்டோவில் ஏற்றி நாங்கள் சென்று பார்த்த போது அவருக்கு பின்தலையில் இரத்தக்காயம் இருந்தது என்றும், அவரை 108 ஆம்புலன்ஸ்சில் ஏற்றி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 151/2022**

**Deposition of Wit/ness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜாமணி | Caste | : | |
| Father/Husband Name | : | ஜெயராஜ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.03.2026**

**முதல் விசாரணை** :

நான் குள்ளநேரியில் வசித்து வருகிறேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சுமார் 3 அல்லது 4 வருடங்களுக்கு முன்பு வலையகுளத்து கண்மாய் அருகே நான் வயகாட்டு வேலை வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கே சாலை அருகே கூட்டமாக இருந்தது. என்னவென்று கேட்ட போது விபத்தில் யாரோ அடிப்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். மற்ற விபரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 13.02.2022ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் கேசவம்பட்டியில் உள்ள ஜெயராமன் தோட்டத்திற்கு நான் பேச்சியம்மாள், அன்னம்பிள்ளை ஆகியோர் எதிரியின் TN 58 AA1535 என்ற ஆட்டோவில் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது வலையகுளம்

கம்மா அருகே சென்று கொண்டிருந்த போது மேற்படி வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி திடீரென பீரேக் போட்டதால் மேற்படி பேச்சியம்மாள் தவறி கீழே விழுந்துவிட்டார் என்றும், உடனே ஆட்டோவில் ஏற்றி நாங்கள் சென்று பார்த்த போது அவருக்கு பின்தலையில் இரத்தக்காயம் இருந்தது என்றும், அவரை 108 ஆம்புலன்ஸ்சில் ஏற்றி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 151/2022**

**Deposition of Wit/ness for PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **யோகராணி** | Caste | : | |
| Father/Husband Name | : | **மோகன்ராஜ்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.03.2026**

**முதல் விசாரணை** :

நான் வடகம்பட்டியில் வசித்து வருகிறேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தில் இறந்துபோனவர் எனது அம்மா பேச்சியம்மாள் ஆவார். செட்டிகுளம் போகும் பாதையில் எனது அம்மா ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டதாக என்னிடம் தகவல் சொன்னார்கள். நான் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு எனது அம்மா 5 நாட்கள் சிகிச்சை எடுத்தார் பின்னர் சிகிச்சை பலனின்றி எனது அம்மா இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் எனது முதல்விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 151/2022**

**Deposition of Wit/ness for PW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பிச்சையப்பா** | Caste | : | |
| Father/Husband Name | : | **ராஜாமணி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.03.2026**

**முதல் விசாரணை :**

**முதல் விசாரணை**

நான் செட்டிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கையெழுத்து போட்டேன். எதற்காக கையெழுத்து போட்டேன் என்று தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.02.2022 அன்று காலை 7.00 மணிக்கு செக்காணூரணி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மேற்படி காவல் நிலைய குற்ற எண் 61/2022 என்ற வழக்கில் சம்பவ இடத்தை எனது மற்றும் மூர்த்தி முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார்

செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**